உ

சிவமயம்

கேதாரி ஈஸ்வரர்

நோன்புகதை.



சென்னை:

பூமகள்விலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1929

உ

சிவமயம்

கேதாரீசுவரர்நோன்புகதை

காப்பு

தாரணைய கூந்தற் கவுரி யியற்றியகே
தார விரதகதை யான்படிக்கச்—சீரிலகும்
ஐந்துகரத்தந்திமுகத் தண்ணலடியார்க்கருளுங்
கந்தமலர்ச் செஞ்சரணே காப்பு.

ஆதிகாலத்திலே ஸ்ரீகைலாயத்தில் நவரத்தினங்களிழைத்த ஓர்சிம்மாதனத்தின்மீதில் பரமேஸ்வரரும்பார்வதாதேவியும்கொலுவாகவீற்றிருக்கையில் பிரம்மா விஷ்ணு தேவேந்திரன்முதலான முப்பத்து முக்கோடிதேவர்கள் நாற்பத்தெண்ணாயிரம்ரிஷிகள் அஷ்டவசுக்கள் கின்னரர் கிம்புருடர் கெருடகாந்தருவர் சித்தவித்தியாதரர் ஜெனகர் ஜெனகனந்தனர் ஜெனத்குமாரர் தும்புருநாரதர் மற்றுமுண்டானதேவரிஷிகளும் இன்னம் யிதரமான தேவர்களும் பிரதிதினம்வந்துபரமசிவத்தையும் பார்வதாதேவியையும் பிரதட்சண நமஸ்காரஞ்செய்துக்கொண்டுபோவார்கள். இப்படியிருக்க ஒருநாள் சமஸ்தமான தேவர்களும் ரிஷிகளும்வந்து ஈஸ்வரரையும் ஈஸ்வ[illegible]யையும் பிரதக்ஷண நமஸ்காரஞ்செய்து தோத்திரஞ்[illegible]ய்து சிலவுபெற்றுக்கொண்டு தங்கள் தங்கள் எதாஸ்தான

ங்களுக்குப்போகிறசமயத்தில் பிருங்கியென்கிற ரிஷி ஒருவர்மாத்திரம்பார்வதிஅம்மனை புறம்பாகத்தள்ளி விட்டு ஈஸ்வரரைமாத்திரம் பிரதக்ஷண நமஸ்காரஞ் செய்து ஆனந்தக்கூத்தாடினார். அப்பொழுது பார் வதியம்மனுக்கு மஹா கோபமுண்டாகி பிரம்மா விஷ்ணு ருத்திரன் தேவேந்திரன் முதலாகிய முப்ப த்துமுக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும் கின்னரர் கிம்புருடர் கெருடகாந்தருவர் சித்தவித்தியாதரர் ஜெனகர்ஜெனகனந்தனர் ஜெனத் குமாரர்கள் தும்புருநாரதர் கௌதமர் அகஸ்தியர் மற்றுமுண்டான தேவர்களும் வந்து ஈஸ்வரரையும் நம்மையுங்கண்டுவணங்கிப்போவார்கள்இந்தபிருங்கி மஹாரிஷிவந்து நம்மைப்புறம்பாகத் தள்ளிவைத்து ஈஸ்வரரைமாத்திரம் நமஸ்கரித்துநின்றானென்றுவெ குகோபமுண்டாகி பரமேஸ்வரிகேட்கப் பரமேஸ்வ ரன்சொல்லுகிறார். "வாராய் பார்வதியே! அவன்பாக் கியத்தைகோரியவனல்ல; மோட்சத்தைக்கோரினவ னானபடியால் எம்மைமாத்திரம் பிரதட்சண நமஸ் காரஞ்செய்தான்" என்றுபரமேஸ்வரன்சொல்ல அப் பொழுது பரமேஸ்வரிகோபித்துக்கொண்டு பிருங்கி ரிஷியைப்பார்த்து "ஒப்பிருங்கிரிஷியே! உன்னிடதே கத்திலேயிருக்கிறரத்தமாங்கிஷம் நம்மிடகூறாச்சுதே அவைகளைவைத்திருக்கத்தேவையில்லைகொடுத்துவிடும் [illegible]ய்" என்றுபரமேஸ்வரிசொல்ல, அப்பொழுது [illegible]ங்கிரிஷி தன்னிட சரீரத்திலிருந்த இரத்தமாங்கி

ஷத்தை உதறிவிட்டபின்பு தன்னுடையகூறாகிய இரத்தமாங்கிஷத்தை எடுத்துக்கொண்டு பரமேஸ்வரி பூலோகத்தில் வந்துவிட்டாள். வந்தபிறகு பிருங்கி மஹாரிஷிக்கு இரத்தமாங்கிஷம் போய்விட்டபடியினாலே எழுந்திருக்கமாட்டாமல் அசக்தனாய் நிற்கிறதைப் பரமேஸ்வரர் கண்டு "ஏன் பிள்ளாய் பிருங்கி மஹாரிஷியே! அசக்தனானாய்" என்று கேட்க, அதற்குமறுவுத்திரவுயாதெனில் ஈஸ்வரியானவள் என்னை நீக்கி சுவாமியைமாத்திரம்தெண்டன்சமர்ப்பித்ததற்காக அம்மனுக்குக்கோபம்பிறந்து தன்னுடைய இரத்தமாங்கிஷத்தை வாங்கிக்கொண்டாள். ஆகையால் அசக்தனானேன் என்றார். இந்தா தண்டென்று ஒருதெண்டு கோல்ரிஷிகையிலேகொடுத்தார். அந்த தெண்டை ஊன்றிக்கொண்டு மறு ஒரு நமஸ்காரஞ் செய்து தம்முடைய ஆசீர்மத்திற்குளெழுந்தருளினார். பரமேஸ்வரி பரமேஸ்வரரைப்பார்த்து நீர் தானே உபேக்ஷைசெய்யலாமோ? இனிமேல்எனக்குக்காரியமென்னவென்று கைலாயத்தை விட்டு பூலோகத்தில் வால்மீகமஹாரிஷிசஞ்சரிக்காநின்ற பூங்காவனத்தில் ஒரு விருட்சத்தினடியில் எழுந்தருளி யிருந்தாள். அந்த திக்கில் பனிரெண்டுவருஷம் மழையில்லாமல் விருட்சங்கள் செடிகள் உலர்ந்துவாடியுமிருந்த விருட்சங்களெல்லாம் துளிர்த்து தழைத்துபுஷ்பித்து காய்த்துபழுத்து இன்னும்அநேகபூஞ்செடி[illegible]ளெ[illegible] மல்லிகை முல்லை கோங்கு இருவாக்ஷி மந்தாரை[illegible]ரி

ஜாதம்சண்பகம் சிறுமல்லிகை புன்னை பாதிரிவில்வம் பத்திரி துளபம் மற்றுமுண்டான சகலஜாதி புஷ்பங்கள் விஸ்தாரமாய்ப்புஷ்பித்து பரிமளித்து சுற்றிலும் நாலுயோசனை விஸ்தீர்ணம்பரிமளம்வீசினது. அந்தச் சமயத்தில் வால்மீகமஹாரிஷி தம்மிட பூங்காவனத்தைப்பார்த்து அதிசயப்பட்டு பனிரெண்டு வருஷம் மழையில்லாமல் உலர்ந்து யிருக்கின்ற விருட்சங்களெல்லாம் இப்பொழுது ஆச்சரியமாய் துளிர்த்து புஷ்பித்து காய்த்து பழுத்திருக்கின்ற ஆச்சரியம் என்னமோ தெரியவில்லையென்று மனதில்நினைத்துக் கொண்டு பூங்காவனத்திற்கு வந்தார்.

வந்தவுடன் சகலபுவனகர்த்தாவாகிய பரமேஸ்வரன் பரமேஸ்வரி பிரமா விஷ்ணு வந்திருக்கிறார்களோ அவர்களைக் காணவேண்டுமென்று அந்தவனமெல்லாஞ்சுற்றிஆராய்ந்துபார்க்குமிடத்தில் ஸ்ரீபார்வதாதேவி அம்மன் ஒரு வில்வ விருட்சத்தினடியில் எழுந்தருளியிருக்கிறதைக்கண்டு "மூவருக்கு முதன்மையானதாயே! முப்பத்துமுக்கோடிதேவர்களுக்கும் நாற்பத்தெண்ணாயிரம்ரிஷிகளுக்குமொருதெய்வமாய் நின்றபராசத்தியானஈஸ்வரியே! நான்எத்தனைகோடி தவஞ்செய்தேனோ! இந்தபூங்காவனத்திலேஎனக்குக் காட்சி கொடுக்கத்தக்கதாகக் கைலாயத்தை விட்டு இந்த பூலோகத்திற்கு நீர் எழுந்தருளினதென்ன? என்று மிகவும் தோத்திரஞ் செய்து நீர் என்ன காரணமாக எழுந்தருளினதோ? அதை அடியே

னுக்குத் திருவாய்மலரத் திருவுளம்பற்றவேண்டும்'' என்று வால்மீகமகாரிஷிகேட்க, அப்பொழுது பார்வதியம்மன் திருவாய் மலர்ந்து சொல்லுகிருள். "கேளும் ஓவால்மீகமஹாரிஷியே! ஸ்ரீகைலாயத்தில் பரமேஸ்வரரும் நாமும் ஓர் நவரத்தின சிம்மாதனத்தில்வீற்றிருக்கையில் பிரம்மாவிஷ்ணு தேவேந்திரன் முதலான தேவர்களும் மற்றுமுண்டான மகாரிஷிகளும்வந்து இருவரையும் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்துப்போவார்கள். ஒருநாள் பிருங்கிரிஷிவந்து சுவாமியைமாத்திரம்நமஸ்கரித்து நம்மைபுறம்பாகத்தள்ளினன். அப்பொழுது நம்மை இவனு புறம்பாகத்தள்ளுகிறவனென்று கோபத்துடன் நம்முடைய கூருன இரத்தமாங்கிஷத்தை வாங்கிக்கொண்டேன். அப்பொழுது பரமேஸ்வரர் அவனுக்கு உபேட்சைசெய்து ஒரு தெண்டுகொடுத்தார். இப்படிச் செய்யலாமோவென்று கேட்டதற்கு அவர்மறுமொழிசொல்லவில்லை. ஆகையால்நமக்குகோபம்பிறந்து பூலோகத்திற்குவருகிறபொழுதுஇந்தபூங்காவனத்தைகண்டு இங்கேயிருந்தோம்'' என்று பார்வதியம்மன்வால்மீகமஹாரிஷியுடன்சொல்லஅந்தமஹாரிஷியும் "என்னுடையாசிர்மத்திற்கெழுந்தருளிவரவேண்டும்'' என்று நமஸ்கரித்தார். அப்படியேநல்லதென்றுபரமேஸ்வரியும் வால்மீகமஹாரிஷியினுடைய ஆசிர்மத்திற்குதயவாய்வர, ரிஷியானவர் அம்மனிருக்கஒருஆசிர்மமும் ஒரு நவரத்தினசிம்மாதனமும் உண்டுபண்ணி அந்த

நவரத்ன சிம்மாதனத்தின்மீது எழுந்தருளினபின்பு பரமேஸ்வரி வால்மீகரிஷியைப் பார்த்து "ஓ மஹாரிஷியே! இந்தபூலோகத்தில்நான் ஒருவிரதம்அனுஷ்டிக்கவேண்டும் நூதனமாய்மேலானவிரதம் ஒன்றிருக்குமானால் அதை எனக்கு நீர் சொல்லவேண்டும்" என்று கேட்க, வால்மீகமஹாரிஷி தொழுது தோத்திரித்து"என் தாயே!லோகமாதாவே!அபிராமிதாயே திரிபுரசம்மாரி! சிவகாமி! கௌரி! கைலாசவாசகி! விபூதிருத்ராட்சி! கிருபாசமுத்ரி! கிருபாநந்தி!வேதஸ்வரூபி! உம்மிடபாதத்திற்கு அடிமையாகிய அடியேன் ஒருவிண்ணப்பஞ்சொல்லுகிறேன்; கோபமில்லாமல்கேட்டு திருவுளஞ் செய்யவேண்டும்" என்று சொல்ல ஆனல்"அதென்னவென்று" அம்மன்கேட்க "கேளாய் ஈஸ்வரியே! இந்த பூலோகத்தில் ஒருவருக்குந் தெரியப்படாத ஒரு விரதமுண்டு அந்த விரதத்திற்கு கேதாரீஸ்வரர் நோன்பென்று பெயர். அதை இதுவரையில் யாரும் அனுஷ்டிக்கவில்லை. நீர் அந்த விரதத்தை அனுஷ்டித்தால் இஷ்டசித்தியாகும்" என்றுசொன்னார். அதைப்பரமேஸ்வரிகேட்டு"அந்த விரதம்எக்காலத்தில் எவ்விதமாகஅனுஷ்டிக்கின்றது எனக்குநன்றாய்நீர்தெரியப்படச்சொல்லவேண்டும்" என்று கேட்க வால்மீக மஹாரிஷி சொல்லுகிறார்: "புரட்டாசிமாதம் சுக்கிலபக்ஷதசமி துடங்கி ஐப்பசி மாதம்கிருஷ்ணபட்சமிதீபாவளி அமாவாசைவரைக்கும் இருபத்தொருநாள்பிரதிதினம்ஸ்நானஞ்செய்து

பரிசுத்த வஸ்திரந் தரித்துக்கொண்டு ஆலவிருட்சத்தின் அடியில் மணலில் சிவலிங்கம் பிடித்துவைத்து ஈஸ்வரராகப் பாவித்து அபிஷேகஞ் செய்து விபூதி சந்தனக்ஷதைபுஷ்பஞ்சாத்திதூபதீபநைவேத்தியஞ் செய்து ஒரு வெல்லவுண்டை ஒரு சந்தனவுண்டை ஒரு மஞ்சளுண்டை ஒரு அதிரசம் ஒரு வாழைப் பழம் ஒருதேங்காய் ஒருபாக்கு ஒருவெற்றிலை இதுக ளெல்லாம்நேமகமாய்வைத்துநைவேத்தியஞ்செய்து தூபதீபங்கொடுத்துசுகந்தவில்வார்ச்சனை அர்ச்சித்து நமஸ்காரஞ்செய்து பிற்பாடு ஒருகயிறு இருபத்தோ ரிழையிலேமுறுக்கி அதைத்தினந்தினமும் ஒரு முடி யாக இருபத்தொருமுடிமுடிந்து தினந்தினமும் உப வாசமாயிருந்து நைவேத்தியஞ்செய்து அதிரசத்தை யும் புசித்து இந்தப்படிக்கு இருபத்தொருநாளுங் கிரமமாக இந்தவிரதத்தை அனுஷ்டித்தால் இருபத் தோராநாள் தீபாவளி அமாவாசையினன்றைக்குப் பரமேசுவரர்ரிஷபவாகனரூடராய்எழுந்தருளிவந்து காக்ஷிகொடுத்து நீர்கேட்டவரத்தைக்கொடுப்பார்'' என்று வால்மீகமஹாரிஷி சொல்ல, அதைக்கேட்டு ஈஸ்வரி வெகு சந்தோஷப்பட்டபிறகு வால்மீகரான வர் ஈஸ்வரிகையினால் சகல சாமான்களுந் தருவித்து ஐப்பசிமாதத்திலேசுக்கிலபட்சம்தசமிதுடங்கிஅமர பட்சம் சதுர்த்தசி அமாவாசைவரைக்கும் இருபத் தொருநாளும்தினமானம்ஸ்நானஞ்செய்து பரிசுத்த வஸ்திரந் தரித்துக்கொள்ளச்சொல்லி ஆலவிருட்சத

தின் கீழே மணலாலே சிவலிங்கம்பிடித்து வைத்து ஈஸ்வரராகப்பாவித்து அபிஷேகம்செய்து சந்தனாட்சதை புட்பஞ்சாத்தி தூபதீபம்பரிமாறி நைவேத்தியஞ்செய்து ஒருவெல்லவுண்டை ஒருசந்தனவுண்டை ஒரு மஞ்சளுண்டை ஒரு அதிரசம் ஒரு பழம் ஒரு பாக்கு ஒரு வெற்றிலை இதுகளை நேமகமாகவைத்து நிவேதனஞ்செய்து தூபதீபங் கொடுத்து சுகந்தவில்வார்ச்சனைசெய்துநமஸ்காரஞ்செய்வித்து ஒருயிழையிலே ஒருநூலும்வைத்து அதிலே ஒருமுடிமுடிந்து வைத்து பிற்பாடு நேமகத்தோடே அந்தநைவேத்தியத்தை சாப்பிடச்சொல்லி இப்படி ஈஸ்வரிகையினாலே இருபத்தொருநாள் பூசைசெய்வித்து இருபத்தொருபழம் இருபத்தொருஅதிரசம் இருபத்தொரு வெல்ல உண்டை இருபத்தொரு சந்தனவுண்டை இருபத்தொரு மஞ்சளுண்டையும் நைவேத்தியஞ்செய்து தூபதீபங்கொடுத்து இருபத்தொரு யிழையிலேதோரணித்து இருபத்தொரு முடிமுடிந்து தரித்துக்கொண்டு அர்ச்சனைசெய்து ஈஸ்வரிநமஸ்காரஞ்செய்து தோத்தரிக்கும்போது கைலாயத்திலேயிருந்து பரமேஸ்வரர்ரிஷபவாகனத்தின்பேரிலே பிரமாவிஷ்ணு தேவேந்திரன்முதலான தேவர்கள்ரிஷிகள் சூழத்தக்கதாகப் பார்வதாதேவிக்குமுன்பாகவந்து, 'ஒய்பராசத்தி! உமக்கென்னவேணும்' என்றுகேழ்க 'உம்மிடசரீரத்திலே அர்த்தசரீரம்வேண்டும்' என்று கேழ்க்க, அப்படியே அர்த்தநாரி ஈஸ்பரராய் காக்ஷி

கொடுத்து "இன்றுமுதல் இந்த விரதத்தை யாதாமொருவர் அனுஷ்டித்தாலும் அவர்களுக்குவேண்டிய பாக்கியத்தைக் கொடுப்போம்" என்று சொல்லி கைலாயத்துக்கு யெழுந்தருளினார்.

அப்படிப்பட்ட கேதாரி விரதத்தை தேவதா ஸ்திரீகள்முதலியோர் அனுஷ்டித்து வேண்டியவரங்களைப்பெற்றார்கள் இப்படி நடந்துவருகிறநாளையிலே பூலோகத்து ஜனங்களுக்குத் தெரிவிக்கும்பொருட்டு தெய்வலோகத்திலுமிருந்து தெய்வ கன்னியர்கள் பூலோகத்துக்கு வந்து கங்கைக்கரையிலே ஆலவிருட்சத்தின்கீழே அந்த இருபத்தொருநாளும் அப்படியே நோற்கிறது வெகு அருமையென்று ஒரேதாமாய் ஐப்பசிமாதம் அமரபட்சத்து சதுர்த்தசியில் அந்த தெய்வகன்னியர்கள் மணலிலே இலிங்காகாரமாய் உண்டாக்கிவைத்து இருபத்தொருதரம் பூசை செய்து இருபத்தொருபழம் இருபத்தொரு அதிரசம் இருபத்தொரு வெல்லவுண்டை இருபத்தொரு சந்தனவுண்டை இருபத்தொருமஞ்சளுண்டை இருபத்தொருபாக்கு இருபத்தொரு வெற்றிலை இருபத்தொரு யிழையிலே கயிறு அதிலே இருபத்தொரு முடிமுடிந்துவைத்து நைவேத்திய தூபதீபங்கொடுத்து நல்ல சுகந்த புஷ்பங்கள் வில்வங்களாலே அர்ச்சனைசெய்து வருகிறவேளையிலே ஒரு இராசாவுக்கு இரண்டு பெண்களுண்டு ஒருத்திபேர் புண்ணியவதி ஒருத்திபேர்பாக்கியவதியென்னும்பெயரை உடைத்

தானவர்கள் அந்தப் பெண்கள் தகப்பனார் மிகவுந் தரித்திரர். இப்படி யிருக்கிறவர்கள் அந்தப் பெண்களுக்கு கலியாணமுமில்லை. அந்த இரண்டு பெண்களும் அன்றைக்கு கங்கைக்கரைக்கு வந்தார்கள்.

அங்கே தெய்வகன்னியர்கள் நோன்புநோற்கிறதைப்பார்த்து "அம்மா! நீங்கள்யார்? இவ்விடத்தில் என்ன செய்கிறீர்கள்?" என்று கேழ்க்க, அப்படி கேட்ட பெண்களை தெய்வகன்னியர்கள் பார்த்து அவர்கள்விருத்தாந்தத்தைக்கேட்டு 'ஓய்பெண்களே! நாங்கள் தெய்வகன்னியர்கள் பூர்வத்திலே யிந்த நோன்பை பரமேசுவரி நோற்று ஈஸ்வரரிடப்பாகம் பெற்றாள். இதுகேதாரிவிரதம் இந்த நோன்புநோற்கிறவர்களுக்கு நினைத்த காரியம் கைகூடும்" என்று சொன்னார்கள். அப்போது அந்தப்பெண்கள் அந்த நோன்பு நோற்கிற காலமும் இதின் நடத்தையுஞ் சொல்லவேண்டுமென்று கேழ்க்க, "இது துலாமாசமாகிய ஐப்பசிமாதம் சுக்கிலபக்ஷம் தசமிதுடங்கிய அமரபட்சம் சதுர்த்தசி அமாவாசைபரியந்தம் இருபத்தொருநாள் தினம்ஸ்நானம்செய்து பரிசுத்தமான வஸ்திரம்தரித்துக்கொண்டு ஈஸ்வரரை ஆலவிருக்ஷத்தின்கீழேமணலினாலே இலிங்கமாகஅமைத்து பூசை நைவேத்தியஞ்செய்து வருகிறதென்று கிரமமாகச் சொல்லி இது நோற்கிறபேர்கள் சகல பாக்கியமும் பெறுவார்கள். அப்படிஇருபத்தொருநாள் செய்கிறதற்குநம்மாலேமுடியாது ஆகையால்சதுர்த்தசியிலே

ஸ்நானஞ்செய்து ஆலவிருட்சத்தின்கீழே மணலி
னாலே கேதாரி ஈசுவரரை பாவனை செய்துவைத்து
பூசைசெய்து தூபதீபங்கொடுத்து இருபத்தொரு
பழம்இருபத்தொருஅதிரசம் இருபத்தொருவெல்ல
வுண்டை இருபத்தொரு சந்தனவுண்டை இருபத்
தொரு மஞ்சளுண்டை இருபத்தொரு பாக்கு இரு
பத்தொருவெற்றிலைஇருபத்தொருயிழையிலேகயிறு
அதிலேஇருபத்தொருமுடிமுடிந்துவைத்துநைவேத்
தியஞ்செய்துதூபதீபங்கொடுத்து அர்ச்சனைசெய்து
நமஸ்காரஞ்செய்து துதிபண்ணினால் அவர்களுக்கு
வேணத்தக்கபாக்கியத்தைக் கொடுப்பார் ஈஸ்வரர்''
என்றுசொல்ல, அந்த இரண்டு ராஜகன்னியர்களும்
தெய்வகன்னியரை வேண்டிக்கொண்டு தங்கள்யிருப்
பெல்லாஞ்சொல்லி எங்களை தேசாதிபதிகள் வந்து
கலியாணஞ் செய்யத்தக்கதாகவே அனுக்கிரகஞ்செ
ய்யவேணுமென்றுபெண்கள்தெய்வகன்னிகளைநமஸ்
காரஞ்செய்யஅவர்கள் சந்தோஷமாயிந்தநோன்பை
நோர்க்குங்களென்று பலவகையுஞ்சொல்லி அவர்க
ளுக்குநூலில்லாமல்ஆலம்விழுதைவாங்கிஅதிலேயிரு
பத்தொருமுடிமுடிந்து தாங்கள்படைக்கிறதுடனே
கூடவைத்துபடைத்து அந்தநோன்புதோரணத்தை
இவர்கள் கையிலேகொடுத்து "இந்தப்படி வருஷா
வருஷம் நோன்பு நோற்றுவாருங்கள் உங்களுக்கு
வேண்டியபாக்கியம்வரும் கலியாணமுங் கைகூடும்''
என்றுவாழ்த்தி ஆசீர்வாதஞ்செய்துஅனுப்பிதெய்வ

கன்னியர்களும்தெய்வலோகம்போனார்கள். பிற்பாடு இந்தப்பெண்கள் இரண்டுபேரும் தங்கள் வீட்டுக்கு வரும்போது தங்கள்வீடுமாடமாளிகையும்சகல ஐஸ்வரியமுமாயிருக்கக்கண்டு தங்கள்வீடுமுன்னே யிருந்தாப்போல்யிருக்கவில்லையேஎன்று மயங்கும்போது அவர்கள் தகப்பனார் முகவாயிலிலேவந்து பெண்களை அழைத்துப்போய்அவர்களுக்கு திவ்வியவஸ்திரமும் திவ்வியஆபரணமும்கொடுத்து திவ்வியபோஜனமுங்கொடுத்துக்கொண்டு சந்தோஷமாயிருக்கும்போது ராசகிரி லேயிருந்து ஒருஇராஜாவந்துபெண்கேட்டு புண்ணியவதியாகையால்ஆடம்பரத்துடனே கலியாணஞ்செய்துக்கொண்டு போனபிற்பாடு அழகாபுரி பட்டணத்து இராஜகுமாரன்வந்து பாக்கியவதியை சகலஆடம்பரத்துடனே கலியாணஞ்செய்து அழைத்துக்கொண்டு போனார்கள்.

அவர்களும் இந்த நோன்பு பலத்தினாலே நமக்கு அதிர்ஷ்டம்வந்ததென்று வருஷாவருஷம் நோன்பு அனுசரித்து புத்திர சம்பத்து போகபாக்கியமுமாயிருக்கிறநாளையிலே பாக்கியவதி யென்கிறவள் தன்னுடையஅதிஷ்டத்தினாலேநோன்பைமறந்துநோன்புத்தோரணத்தைஅவரைப்பந்தலின்பேரில் அவிழ்த்துப் போட்டுவிட்டாள். அப்படி மறந்துபோனபடியினாலே மறுமண்டலத்து இராஜா சதுரங்கசேனையுடனேவந்து அழகாபுரிபட்டணத்தைக் கொள்ளையிட்டு பண்டிபண்டார சமஸ்தமும் வாங்கிக்கொண்

டான். பாக்கியவதிக்குதரித்திரம்வந்து பிரவேசித்து சாப்பாடுசாப்பிடுகிறதற்கும் பிரயாசைப்பட்டுவாசலிலே அவரைச்செடியிலேமிகுதியாய்க்காய்க்கிறபடியால்அந்த அவரைக்காயைப்பரித்து கிருஷிசெய்துக்கொண்டிருப்பார்கள், பாக்கியவதி யெண்ணாதமெதல்லாய்யெண்ணி இராஜகிரியிலே தமக்கை வாழுகிறாளென்றுபிள்ளையையழைத்து "இராஜகிரியிலே உன்னிட பெரியதாயாரண்டைக்குபோய் நம்மிடவர்த்தமானஞ்சொல்லி சில திரவியம் வாங்கிவா?" என்று வழிக்குகட்டமுதுங்கட்டிக்கொடுத்து அனுப்பினாள். அப்படியேஅந்தப்பிள்ளைஇராஜகிரிக்குப்போய் தன் பெரியதாயாரைக்கண்டு தங்கள்வர்த்தமானமெல்லாஞ்சொல்ல தாபந்திரியப்பட்டு பிள்ளையைநாலுநாள் வைத்திருந்து சில வஸ்திரங்களும்ஆபரணமும் சில திரவியமும்முடிப்புங்கட்டிக்கொடுத்து கட்டமுதுங் கட்டியனுப்பினாள்அதைவாங்கிக்கொண்டு சிலதூரம் வந்து ஒருகுளக்கரையிலே மூட்டைவைத்துக் கட்டமுது சாப்பிடுகிறவேளையிலே மூட்டையை கருடன்யெடுத்துக்கொண்டு போய்விட்டது அதைகண்டு மனஸ்தாபப்பட்டு மறுபடியும் பெரியதாயாரிடத்துக்குப்போய் இந்தச்சேதியைச்சொன்னான். அப்படியாவென்று மறுபடியும் சிலதிரவியங் கட்டிக்கொடுத்து அனுப்பினாள்.

அதையெடுத்துக்கொண்டுவரும்போது வழியிலே ஒரு திருடன்போலேவந்து அடித்துப் பரித்துக்

கொண்டுபோனான். அப்போது துக்கப்பட்டு பெரிய தாயாரண்டைக்குப்போய் "நாங்கள்பண்ணினபாவமென்னமோ தெரியாது இப்போதுகொடுத்த திரவியத்தையும் திருடன் கொண்டுபோனான்" என்று சொல்லக்கேட்டு "உங்கள் தாயார் கேதாரி ஈஸ்வரர் நோன்புஅனுஷ்டித்துவருகிறாளா இல்லையா?" என்று கேட்க, "அந்தநோன்பு இப்போது அனுஷ்டிக்கிறதில்லைமுன்னேநோற்ற கயிற்றையும் அவரைப்பந்தலின் பேரில் போட்டுவிட்டாள். அன்றுமுதல்இப்படிவந்தாப்போலே காணுகின்றது" என்றான். அப்படியாவென்று ஐப்பசிமாதம் வருந்தனிலும் பிள்ளையை வைத்திருந்துதான்நோற்கிறநோன்புடனே பாக்கியவதிக்கும் ஒருநோன்புவைத்துநோற்று அந்தநோன்புக்கயிறும்பலஹாரமும் பாக்குவெற்றிலைமஞ்சளும் இன்னுஞ்சில ஆடையாபரணமும் திரவியமுங்கொடுத்துசிலசேவகரையுங்கூட்டிஇந்தநோன்பைவிடாமல் நோற்கச்சொல்லிசிலபுத்தியும் சொல்லியனுப்பினாள்.

அப்போதுவழியிலேவரும்போது முன்னேபறித்துப்போனதிருடனும் திரவியத்தைக்கொண்டுவந்து கொடுத்தான். கருடனும் மூட்டையைப் போட்டு 'உன்தாய் விரதம் நோற்காமல் விட்டுவிட்டதினாலே இப்படிவந்தது இனிமேல் பயபக்தியுடனேநோன்பு நோற்கச்சொல்' என்று ஒரு சத்தமுண்டாச்சுது. அதுகண்டு இந்தப்பிள்ளை ஆச்சரியப்பட்டு சந்தோஷத்துடனே தன்வீட்டுக்குவந்து தன்தாயின்கையில்

நோன்புதோரணமும்பலகாரமும்முன்னேகொடுத்து தனத்தையுங்கொடுத்து நடந்த சவிஸ்தாரங்களையுஞ் சொல்ல "மெய்தான் என் ஆங்காரத்தினாலே கெட்டேன்" என்று ஸ்நானஞ்செய்து கேதார்ரி ஈஸ்வரனை நமஸ்காரஞ்செய்து கயிற்றைவாங்கிக்கட்டிக்கொண்டாள். அந்நாழிகைக்கே தங்கள்பட்டணத்தைவாங்கிக்கொண்ட இராஜாவானவன் தங்கள்பட்டணத்தையும் தங்கள் பண்டிபண்டாரமும் ஆனை சேனையும் மொப்புவித்துபகுதியுங்கொடுத்து போய்விட்டான்.

பிற்பாடு இவர்களுக்குப் பழையபடிக்கு தங்கள் சீமையையாண்டுக்கொண்டு சகலசாம்பிராச்சியமும் அநுபவித்துக்கொண்டுநோன்பை மறவாமல்செய்து வந்தார்கள். ஆனபடியினாலே இந்த கேதாரீஈஸ்வரர் நோன்பு யாதாமொருவர் தப்பாமல்செய்துவருகிறார்களோ அவர்களெல்லாம்புண்ணியவதி பாக்கியவதியைப்போலேஇம்மையில்பாக்கியத்தை அனுபவித்து மறுமையில் மோக்ஷத்தையும் அடைவார்களென்று தருமபுத்திர மஹாராஜனுக்கு நாரதமகாமுனிவர் சொல்ல, அப்படியே தருமபுத்திர மஹாராஜாவும் அனுபவித்து சத்துரு ஜெயம்செய்து நாடு ராச்சியமும் பெற்று மோக்ஷம் அடைந்தார்கள்.

கேதாரி ஈஸ்வரர் நோன்புகதை

முற்றிற்று.